<u>பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு</u>

<u>கடவுச்சீட்டுக்கள் அச்சிடுவதை துரிதப்படுத்துவதற்குத் தேவையான ஆளணியைப் பெற்றுக்கொள்ளல்.</u>

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கடவுச்சீட்டு அச்சிடும் பணியை 24 மணி நேரமும் மேற்கொள்வதன் மூலம் துரிதப்படுத்துவதற்குத் தேவையான பிரதிக் கட்டுப்பாட்டாளர் / உதவிக் கட்டுப்பாட்டாளர் பதவிகளுக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இதற்கு முன்னர் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் பிரதிக் கட்டுப்பாட்டாளர் / உதவிக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் சேவையாற்றி அனுபவமுள்ள இலங்கை நிர்வாக சேவையின் அல்லது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

2. 65 வயதுக்கு கீழுள்ள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. ஒப்பந்த அடிப்படையில் சேவை பெற்றுக்கொள்ளப்படும் காலப்பகுதி 03 மாதங்கள் மாத்திரமாகும்.

4. விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் சிறந்த ஆரோக்கியமுள்ள, பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடல் / உள ரீதியான தகைமையைப் பெற்றிருப்பதாக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிடம் எழுத்துமூல சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் (இணைப்பு 01) மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் சுகாதார நிலைமை பற்றிய சுகாதாரம் 307 படிவத்துடன் சுயவிபரத் தகவல் படிவமொன்றையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

6. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025 பெப்ரவரி மாதம் 23 ஆகும். அன்றைய தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவம், சுகாதாரம் 307 படிவம் மற்றும் சுயவிபரத் தகவல்களை ஸ்கேன் செய்து (Scan) adimmirecruit@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

7. மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு 2018.02.20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2018 மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரால் 2025.02.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 07/2025 எனும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இலக்கம் 25/0214/821/001-II மற்றும் 2025.02.05 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

**பீ.எம்.டி.என்.பாலசூரிய**
குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் (பதில் கடமை)
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

2025 பெப்ரவரி மாதம் ...... ஆம் திகதி.
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாயா,
பத்தரமுல்லை.